ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர் எங்கு பிறந்தார்?

-குருக்ருபா-



T.17225
T17225
R005J05

வெளியீடு:

19, ராஜீவ்காந்தி நகர்,
காரைக்கால் - 609602.

பதிப்பித்தவர்:

ப. திருஞானசம்பந்தம்
2522, லக்ஷ்மிராஜபுரம்,
தஞ்சாவூர் - 613003.

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர் எங்கு பிறந்தார்

—குருக்ருபா—

தென்னிந்திய ஸங்கீத மும்மூர்த்திகளில் [illegible]ம் முக்கியமானவராகவும், முதல்வராகவும் போற்றப்படுபவர், ஸத்குரு ஸ்ரீ தியாகராஜரே ஆவார். சிறந்த ராம பக்தரான அவர், தன்னிஷ்ட தெய்வமாகிய ராமன் மீதும், வேறு பல கடவுளரின் மீதும் அற்புதமான கிருதிகளைப் படைத்திருக்கிறார். பற்பல ராகங்களுக்கான 'மார்க்கதர்சி' (வழிகாட்டி) எனவும் அவர் கூறப்படுகிறார். அவரது கீர்த்தனைகள் சுமார் எழுநூறு மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. தியாகராஜர், 'பிறந்தார்க்குமுத்தி' யளிக்கும் திருவாரூரிற் பிறந்தார் என்பது அனைவரிடமும் சகஜமாக நிலவும் நம்பிக்கை. திருவாரூரில் அவர் பிறந்ததாகக் கூறப்படும் வீட்டைப் புதுப்பிக்கும் பணியும் அண்மையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே ஊரில், அவரது ஜயந்தி விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்படத் தொடக்கம் பெற்றுள்ளது. இத்தகு மகத்தான வாக்கேயக்காரரின் பிறந்த அல்லது இறந்த நாளை, நமது நாட்டின் பல மூலைகளில் மட்டுமின்றிப், பிற தேசங்களிலும் கொண்டாடப்படுவதானது, அன்னாரிடம் நமக்குள்ள பக்தி சிரத்தை நிரம்பிய அஞ்ஜலியாக அமையும் என்பதோடு, இவ்வித இசை விழாக்கள், ரஸிகர்களுக்குப் பெரும் இசை விருந்தும் படைக்க வழி செய்வனவுமாகும். அதே சமயத்தில், ஒப்பற்ற இந்த வாக்கேயக்காரர் பிறந்தது திருவாரூரிலா, இல்லையேல் வேறெங்கு என்பதையும், நாம், நமக்கு இவ்விஷயத்தில் துணைபுரியும், அக மற்றும் புறச்சான்றுகளைக் கொண்டு அறிந்துணர்வதும் அவசியமேயாகும். ஏனெனில், தியாகராஜர் தோன்றியது திருவாரூரில் எனுஞ் செய்திக்கான ஆதாரமேதும் இருப்பதாகத் தெரியவில்லை; அவ்விதச் செய்தி, ஒரு கர்ணபரம்பரைக் கதையென்ற ஐயப்பாடும் எழுகின்றது.

முதலில், தியாகராஜர் பிறந்த மற்றும் மறைந்த தேதிகளைப் பார்ப்போம். அவர், 6-1-1847–புஷ்ய பஹுள பஞ்சமி தினத்தன்று சித்தி பெற்றார் என்ற செய்தியை ஏற்று வந்துள்ளோம். கே. வி ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இந்த ஆண்டினை 1846 என்றும், வி. நாகமய்யா என்பவர் [திருவாங்கூர் ஸ்டேட் மான்யுவல்– மூன்றாம் பாகம் – 1906 – பக்கம் 254] 1842 என்றும் எழுதியுள்ளனர். தியாகராஜர் 4-5-1767 அன்று பிறந்தார் என்பதையும் உலகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. வாலாஜாப் பேட்டை வெங்கடரமண பாகவதரின் சீடரான, கவிவெங்கடஸூரி என்பவர் கொடுத்துள்ள தேதி இது. தியாகராஜரின் சீடரும், எழுத்துப் பணியில் உதவியவருமான, தஞ்சாவூர் ராமராவ்

என்பவரும் இதே தேதியினை எழுதிவைத்துள்ளார். பிறந்த, மற்றும் இறந்த, இவ்விரு தேதிகளைக் கொண்டு கணக்கிட்டால், ஸ்வாமிகள் 80 ஆண்டுகள் வாழ்ந்தவரென்று தெரிகிறது. திருவனந்தபுரம் தி. லக்ஷ்மணப் பிள்ளையும் [ESSAYS–பக். 153] இதே கருத்தை ஆதரித்துள்ளார். தன் 'ஸங்கீத ஸம்ப்ரதாய ப்ரதர்சனீ' எனும் நூலில், சுப்பராம தீக்ஷிதர், தியாகராஜர் வாழ்ந்தது 77 ஆண்டுகள் எனப் பேசுகிறார் தியாகராஜரின் சீடர், தில்லைத்தானம் ராம அய்யங்காரின் சீடரான தில்லைத்தானம் பஞ்சு பாகவதர், ஸ்வாமிகள் 88 ஆண்டுகளிருந்தார் என்று எழுதியுள்ளார். இதுவே சரியானதென்பது, டாக்டர். வே. ராகவனின் [சென்னை ஸங்கீத வித்வத் சபை – 21 ஆவது மாநாட்டு சஞ்சிகை–பக். 18] கருத்து. மேலே குறிப்பிடப்பட்ட பஞ்சு பாகவதரின், உடன் பிறந்த தமையனான நரஸிம்ம பாகவதர், 89 ஆண்டுகள் என்று கூறியிருக்கிறார். சகோதரர்களிடையே கருத்து வேற்றுமை! வி. நாகமய்யா, கே. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இருவரும் ஸ்வாமிகள் வாழ்ந்தது 82 ஆண்டுக்காலமே என்பர். ஸி திருமலய்ய நாயுடு எனும் நூலாசிரியர் ['தியாகய்யர்' –பக். 8] 75 ஆண்டுகள் என்ற கருத்தைக் கூறுவார். மறைதிரு எச். ஏ. பாப்லீ என்பார் [MUSIC OF INDIA] தியாகராஜர் 55 வயதுவரை இருந்தவரென எழுதியிருக்கிறார். இவற்றையெல்லாம் விட வேடிக்கையான செய்தி, மஹானாகிய இந்த வாக்கேயக்காரர் வாழ்ந்தது 20 ஆண்டுகள் மட்டுமே என்று காப்டன் ஸி. ஆர். டே தனது கட்டுரைகளில் [ESSAYS–பக். 140] தெரிவித்துள்ளார். வயது விஷயத்தில், இத்தனை வேறுபாடான கருத்துக்கள்!

தஞ்சாவூர் ராமராவினால் எழுதப்பெற்றுக், 'குத்தாலம் சுவடி' எனும் பெயரால் அழைக்கப்படும் குறிப்புகளில், தியாகராஜரின் ஜாதகமும், அதை, அவரது பெற்றோரிடமிருந்து தான் பெற்றதான செய்தியொன்றும் கிடைக்கின்றன. வெங்கடரமண பாகவதரின் குறிப்புச்சுவடிகளிலும் இதே ஜாதகம் இடம் பெற்றுள்ளது. பொட்டி ஜோஸ்யுலு என்ற ஒருவரால், இது கணிக்கப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

வெங்கடரமண பாகவதர், ராமராவ் இருவரும் கொடுத்துள்ள தகவலின்படி ஆந்திர மாநிலத்திலுள்ள. காகர்ல எனுமூரிலிருந்து, தமிழ்நாட்டிலுள்ள திருவாரூருக்குவந்து குடியேறிய குடும்பத்தில் தோன்றியவர் கிரிராஜகவி என்பவர் தஞ்சையை ஆண்டுவந்த ஷாஹஜீயின் (1684–1710) அவையில் முக்கியக் கவிஞராக இவர் விளங்கினார். இக்குடும்பத்தினர் பாரத்வாஜ கோத்ரம், காகர்ல வம்சம், முலகநாடு பிரிவைச்சேர்ந்தவர்கள். பஞ்சநதப்பிரம்மம் என்பவருக்கு, முறையே, ஸதாசிவப்பிரம்மம், ஸதானந்தப்பிரம்மம், ஸச்சிதானந்தப்பிரம்மம், பாலப்பிரம்மம், கிரிராஜப்பிரம்மம், என ஐந்து புதல்வர்கள் சுப்பிரமணிய பாரதி யென்ற மாற்றுப்பெயரையுங்கொண்டிருந்த கிரிராஜருக்கும் ஐந்து

பிள்ளைகள். அவர்களில், ராமப்பிரம்மம் ஒருவர். ஸீதம்மா என்பவரை மணந்து ராமப்பிரம்மம் மூன்று குமாரர்களைப் பெற்றார் அவர்கள் முறையே பஞ்சநதப்பிரம்மம், பஞ்சாபகேசப்பிரம்மம், தியாகராஜப்பிரம்மம் ஆவர்,

பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி, தியாகராஜர் 'செருகுருவாளு பிரிவைச் சேர்ந்தவரெனக் குறிப்பிடுவதோடு, ராமப்பிரம்மத்தின் குமாரர்களை, ஜப்யேசன், ராமநாதன், தியாகராஜன் எனத் தந்துள்ளார். 'கிரிராஜஸுதா தனய' என்ற தியாகராஜரின் பாடல் வரியை ஆதாரமாக்கிக் 'கிரிராஜகவி' ஸ்வாமிகளின் தாய்வழிப் பாட்டனார் தான், என்பார், டாக்டர் வே. ராகவன்.

கிரிராஜர் என்றொருவரின் தம்பியான கவிகிரி என்ற கவிஞர், தன் 'ருக்மாங்கத சரித்ரம்' எனும் நூலில், தமது வம்சாவளியைத் தருகிறார்:-

> கோபால மந்த்ரி – செங்கமாம்பா எனும் தம்பதியரின் குமாரரான ஔபலண்ணா [மனைவி: ஜானகம்மா] நான்கு பிள்ளைகளை பெற்றார். அவர்கள் கோபன்னா. கிரிராஜகவி, வெங்கட, கவிகிரி ஆகியோர். கவிகிரியை வெங்கடகிரி எனவும் அழைப்பார்கள்.

விசித்ர ராயாவதம்ஸரின் [கவிகிரி என்பவருக்கு இந்தச் சிறப்பு பெயருண்டென்பது வடமொழி இலக்கிய ஆய்வறிஞர்களின் கருத்து] 'அபிநய தர்ப்பணம்' என்ற நூலின் திருக்கடைக்காப்புப் பகுதியிலுள்ள சில வரிகள், வருமாறு:-

> '...இதி ஸ்ரீ கமலாம்பிகா விமலக்ருபாலப்த ஸாஹித்ய கலாவதம்ஸ ஸலோஹித கோத்ரஹோபலார்யபுத்ர தர்ப்பகுல பாவன கிரிராஜகவி வரானுஜ விசித்ர ராயாவதம்ஸ ப்ரணீதம்பைன அபிநய தர்ப்பண...'

இதனின்று, கிரிராஜகவி, 'தர்ப்ப' குலத்தைச் சேர்ந்தவரும், லோஹித கோத்ரம், ஆபஸ்தம்ப ஸுத்ரத்தினருமான அஹோபலர் என்பவரின் குமாரர் என்று தெரிகிறது.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையத்தின், மோடிச் சுவடிகளில் ஒரு இனாம் சாசன தஸ்தாவேஜி உள்ளது. பாகவத மேளக் கலைஞர்கள் குடும்பத்தைச் சேர்ந்த அஹோபல சாஸ்திரி என்பவரின் மகனான கிரிராஜகவிக்கு நிலம் மானியமாக அளிக்கப்பட்ட செய்தியை இச்சுவடி கூறும்:

> 'மன்னர் ஏகோஜியின் ராணியின் உத்திரவு இது. சகம் 1657, ரக்தாக்ஷி ஆண்டு, தை மாதம், கிருஷ்ண பக்ஷம், திரயோதசி, மகர ஸங்க்ராந்தி நாளில், தீபாம்பாபுரத்துக்குச் செல்லும் வழியிலுள்ள வீரசோழகன் பேட்டை மஹிமாலைக்கருகே ஒரு அக்கிரஹாரம், என்னால், ஏற்படுத்தப்பட்டுள்ளது சிவன், விஷ்ணுவுக்கான ஆலயங்கள், ஒரு பள்ளிக்கூடம் அந்தணர்களுக்கு வீடுகள்,

துறவிகள் தங்கிட மடங்கள், பசுக்களுக்கான நிலங்கள் என்று-87 வேலி, 3 1/2 மா அளவுடைய நிலம், பேஷ்வாவிடம் ஒப்படைக்கப்படுகிறது. இதிலே, பதின்மூன்றடிக் கோலால் அளந்த முக்கால் வேலி நஞ்சை நிலம், பாகவதமேளக் குடும்பத்தைச் சேர்ந்த அஹோபல சாஸ்திரியின் புத்திரரான கிரிராஜகவீஸ்வரருக்குச் சர்வமானியமாக வழங்கப்பட்டது...'

இரண்டாம் ஏகோஜி [1735-1736] மன்னரின் ராணிஸுஜான்பாயி என்பவர் அளித்த சர்வமானியம் இது. இம்மன்னருக்குப் 'பாவாஸாஹேப்' என்றும் பெயர்.

கவிகிரியினால் கொடுக்கப்படும் 'கோபால மந்த்ரி', 'கோபாலபட்டர்' என்ற பெயர்களும், 'ஔபலண்ணா', அஹோபல' என்றபெயர்களும் முறையே ஒருவரைக் குறிப்பிடுவன, எனினும் மேலே குறிப்பிடப்பட்ட கிரிராஜரும், தியாகராஜரின் பாட்டனார் எனப்படும் கிரிராஜரும் ஒருவரேதானா என்பதை நிச்சயிக்க முடியாமலிருக்கிறது. கவிகிரியின் தமையனான கிரிராஜர், கவிஞர் மட்டுமின்றி, இசைப்புலமையும் நிரம்பியவரென்றும், ஷாஹ்ஜீ மன்னரின் அவையை அலங்கரித்தவரென்றும் பின்வரும் வரிகள் கூறுகின்றன.

'...மார்த்தாண்டகுல சாஹமஹீபால ஸபனு கீர்த்திகெக்கினவாடு கிரிராஜஸுகவி ஸங்கீத குல ரஹஸ்யமுனு கன்னவாடு...'

வெங்கடரமண பாகவதரின் குமாரரும், தியாகராஜரின் சீடருமான வாலாஜாப் பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர் எழுதியுள்ள, ஸ்வாமிகளின் வாழ்க்கைச் சரிதத்தில், கிரிராஜர் என்பவர், தியாகராஜருடைய தாயின் பாட்டனார் என்றும், மாத்ருபூதேஸ்வர ஸ்வாமியின் பக்தர் என்றும் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சுவடியில், தியாகராஜரின் தந்தை வழிப்பாட்டனாரின் பெயர், 'சுப்பிரமணியஸ்வாமி' எனவும் காணப்படுகிறது

சிங்காரச்சுவை செறிந்த பதங்களை இயற்றியவர் கிரிராஜர் என்ற காரணத்தினாலேயே, அவர் தியாகராஜரின் பாட்டனாராக இருக்கமுடியாதென்பது சில அறிஞர்களின் வாதம். ஸ்வாமிகளின் பாட்டனாராகிய கிரிராஜப்பிரம்மம், இறையருள் வேண்டுவதான மற்றும் மத, ஆன்மிகச் சம்பந்தமான பாடல்களைத்தான் இயற்றியிருப்பார் என்பது அவர்கள் கருத்து 'ஸங்கீதஸம்பிரதாய ப்ரதர்சனீ'யில் கிரிராஜரின், 'அவ்விதப் பாடல்கள் சில இடம் பெற்றுள்ளன. ஒரு கவிஞன் அல்லது வாக்கேயக்காரன், சூழ்நிலைகளின் காரணமாகவோ மன இயல்பூக்கத்தின் எழுச்சியினாலோ, சிங்காரச்சுவை கொண்ட பாடல்களைப் படைக்கச் சுதந்திரம் உடையவன் அல்லவா? குறைந்த அளவில்

தான் என்ருலும், தியாகராஜருடைய கிருதிகளில் சிங்காரச் சுவையுள்ளவை, ஏதுமில்லையென்று கூற எவர் முன்வருவார்? சிங்காரம், பக்திக்கு அடித்தளத்தில் அமைந்திருப்பதென்ற காரணத்தினுல்தானே, நம் முன்னோர்கள், சிங்காரச்சுவை (சற்று மிகையீக்கூட)மிளிரும் சிற்பங்களை, வழிபாட்டுக்குரிய இடமாகிய ஆலயங்களில் சமைத்துப்போயிருக்கின்றனர். எனவே, சிங்கார பதங்கள் இயற்றியவர் என்ற காரணத்தை மட்டுமே கொண்டு, கிரிராஜர், தியாகராஜரின் பாட்டனாராக இருத்தல் முடியாதென்று வாதிப்பது, கேலிக்குரிய விஷயமாகும்

மன்னர் ஷாஹ்ஜியின் சமகாலத்தவராகக் [1684-1710] கிரிராஜரும், மன்னர்கள் இரண்டாம் துளஜா [1763-1787], சரபோஜி [1798-1832] ஆகியோரின் சமகாலத்தில் ராமப்பிரம்மமும் அவரது குமாரரான தியாகராஜரும் வாழ்ந்தவர்களென்று கூறப்படுகிறது. ஷாஹ்ஜிக்கும், துளஜாவுக்குமிடைப்பட்ட காலம் நீண்டிருக்கும்படியால், கிரிராஜரும், ஷாஹ்ஜியும் சம காலத்தவராக இருந்திருத்தல் சாத்தியமன்று என்பதும் சிலரது கருத்து. 1710க்கும் 1763க்குமிடையே சுமார் 53 ஆண்டுகள் இடைவெளி உள்ளது. ஆனால், இந்த இரு ஆண்டுகளும், அந்தந்த மன்னரின் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தையோ, முடிவையோ குறிப்பனவேயன்றி, அவர்களது ஜீவியகாலமல்ல. ஆகையால், கிரிராஜர், ஷாஹ்ஜி, இரண்டாம் துளஜா இருவருடைய காலத்திலும் வாழ்ந்திருக்கக்கூடும். இந்தத் துளஜா மன்னர், மற்றும் சரபோஜியின் காலத்தவராகவே, கவிகிரி என்பவர் தோன்றுகிருர் அப்படிப்பார்க்கும்போது, ஷாஹ்ஜியின் சமகாலத்தவரான கிரிராஜர் ஒருவரும் மற்றவர் இரண்டாம் துளஜா காலத்தினராயும் இருந்திருக்கலாம் முதலாவது கிரிராஜரின் வம்சாவளி கோத்ரம் முதலியவைபற்றி அறிய நமக்கு வாய்ப்பில்லாமற் போய்விட்டது ஆனால், இரண்டாவது கிரிராஜரைப் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. கவிகிரியின் பாடல் வரிகள், மற்றும் சில அரண்மனைச் சுவடிகளிலுள்ள சாசனங்கள் வாயிலாக, இவர், லோஹித கோத்ரத்தைச் சேர்ந்தவரென்பது தெரிகிறது.

'குத்தாலம் சுவடி' தரும் செய்தியின்படி, ராமப்பிரம்மம் காளஹஸ்தி அய்யா என்பவரின் மகளான ஸீதம்மா (அல்லது சாந்தாதேவி)என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். தஞ்சை அரண்மனை வீணைக்கலைஞராயிருந்த காளஹஸ்திஅய்யா, மஹிமாலை எனும் கிராமத்தில் வசித்தவர். மோடிச் சுவடிகளில், இவருக்கு மானியமாக நிலம் அளிக்கப்பட்டதற்கான சாசனம் ஒன்றுள்ளது:

> "...பாரத்வாஜ கோத்ரம், ருக் சாகாத்யாயீ, ஆச்வல்யாலை ஸூத்ரம், வீணை வைத்யப்பய்யாவின் பேரனும், வீணை ராமலிங்கய்யாவின் குமாரருமான வீணை காளஹஸ்தய்யாவுக்கு, பவேலி ஜில்லா, தாலுக்கா, மௌஜா பேரணூரில் ஸர்வமானியமாக நிலம் அளிக்கப்படுகிறது... பதினான்கு

அடிக்கோலால் அளந்து, ஒரு வேலி நஞ்சை, கால் வேலி புஞ்சையும், வீணை காளஹஸ்த்தய்யாவுக்குச் சர்வமானியமாகக் கொடுக்கப்படுகிறது...''

இது, 1771 ஆம் ஆண்டில், இரண்டாம் துளஜா மன்னரால் அளிக்கப்பட்ட சர்வமானியமாகும். இந்த சாசனத்தின் மூலம், காளஹஸ்தி அய்யா, பாரத்வாஜ கோத்திரத்தினர் என்பது புலனாகின்றது ராமப்பிரம்மமும் பாரத்வாஜ கோத்திரம்; அவருக்குப் பெண் தந்த காளஹஸ்தி அய்யாவும் அதேகோத்திரமா? ஹிந்து மதச் சாத்திரங்களின் ஒரு பகுதியான ''க்ருஹ்ய ஸூத்ர''ங்கள், ஒரே கோத்திரத்தைச்சேர்ந்த இரு குடும்பத்தாரிடையே, திருமணச் சம்பந்தம் கூடாதென்று தடை விதித்திருக்கிறதே! எனவே, இவர்களில், யாரோ ஒருவருடைய கோத்திரம் வேருகத்தான் இருந்திருக்கமுடியும். மேற்கண்ட சாசனப்படி காளஹஸ்தி அய்யாவின் கோத்திரம் என்ன என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. தஞ்சை அரண்மனைக் குறிப்புகளில், வேருெரு காளஹஸ்தி அய்யா இருந்ததாகத் தகவலே இல்லை. வீணை ராமலிங்கய்யா என்ருெருவர் மட்டும், தஞ்சையைக் கடைசியாக அரசாண்ட சிவாஜி மன்னரின் [1833 - 1855] காலத்திலிருந்திருக்கிருர். இவர், மஹா வைத்தியநாத அய்யரின் சம காலத்தவர். எனவே, இரண்டாவது துளஜா மன்னரின் காலத்தவரான காளஹஸ்தி அய்யாவின் தந்தையாக இவரைக் கூற முடியாது. தியாகராஜரின் பாட்டனுர்களாகக் கிரிராஜரையும், காளஹஸ்தி அய்யாவையும் நாம் கொள்வோமானால், கிரிராஜர், லோஹித கோத்திரக்காரராகத்தான் இருந்திருக்கமுடியும் இந்தக் கட்டத்தில் மற்ருெரு சுவையான விஷயத்தையும் நாம் காணவேண்டும்.

ராமப்பிரம்மத்தின் உடன் பிறந்த தங்கையைத், தஞ்சாவூரிலிருந்த சிவராமகிருஷ்ணய்யா என்பவருக்கு மணம் முடித்தார்கள். இந்தச் சிவராமகிருஷ்ணய்யாவின் மூத்தகுமாரரே, பிரபல வாக்கேயக்காரரும், தியாகராஜரின் முதற் சீடருமான மானம்புச்சாவடி வெங்கடசுப்பய்யா. இவரது பரம்பரையினர் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இக்குடும்பத்தின் வம்சாவளி, மற்றும் பலகுறிப்புகள், காலங்காலமாக இவர்களுடைய பாதுகாப்பில் உள்ளன. இக்குறிப்புகளில், சிவராமகிருஷ்ணய்யா என்பவர், பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவரென்றும், அவரது குடும்பப்பெயர் 'ஆகுமடுல' என்றும் காணக்கிடைக்கின்றது. மீண்டும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்த இரு குடும்பத்தாரிடையே திருமணமா என்ற கேள்வி, நம் முன்பாக எழுகின்றது. இக்குடும்பங்களைச் சேர்ந்த பெரியவர்களுக்குச் சாத்திரம் விதித்துள்ள தடைபற்றித் தெரியாதா?! இதனின்றும் நாம் அறிவது. தியாகராஜர், பாரத்வாஜ கோத்திரத்தில் உதித்தவராயிருந்திருக்க நியாயமேயில்லை என்பது.

ஷாஹ்ஜீயின் பேரன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரராகி, அநேகமாகத் தினந்தோறும் இருவரும் சந்தித்து, அளவளாவும் தகுதியும், உரிமையும் பெற்றிருந்த கிரிராஜகவி, தஞ்சையில்தான் வாழ்ந்திருந்தார். அவரைச் சந்திக்காமல், மன்னருக்கு ஒருநாள் கூடக் கழிந்ததில்லை. பாகவதமேளக் குடும்பத்தவரான கிரிராஜர் (இவர் வேறொருவராயிருப்பின்) தஞ்சையிலோ, அல்லது அருகாமையிலுள்ள ஏகமஹாராஜபுரத்திலோ வாழ்ந்திருக்க வேண்டும். ஆக, இவ்விரு கிரிராஜர்களுமே, திருவாரூருடன் எவ்விதத் தொடர்பும் அற்றவர்கள். 'குத்தாலம் சுவடி'யில் கண்டுள்ளபடி, கிரிராஜரின் தந்தை பெயர், திருவையாற்றுக்கு உறவுடையதாகவே இருக்கின்றது.

தியாகராஜரின் தந்தை ராமப்பிரம்மம் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. ராமாயணப் பிரவசனம் செய்வதில் நிபுணராக விளங்கிய அவருக்கு, இரண்டாம் துளஜா மன்னர் வழங்கிய மானியங்களும், பரிசுகளும் ஏராளம், திருவையாறு திருமஞ்சன வீதியில் ஒரு வீடும், பசுபதி கோவிலுக்கருகே ஆறு ஏக்கரா நிலமும், அவருக்கு மன்னர் அளித்தவைதாம். மருதாநல்லூர் மடாதிபதிகளிடம், ராமதாரக மந்திர உபதேசத்தை ராமப் பிரம்மம் பெற்றதாக, வெங்கடரமண பாகவதரின் சுவடி கூறும். இச் சுவடியும், கிருஷ்ணஸ்வாமி பாகவதரின் சுவடியும் மற்றொரு செய்தியையும் தெரிவிக்கின்றன:

> காசிக்குத் தன் மூன்று பிள்ளைகளுடன் கிளம்பிய ராமப்பிரம்மத்தின் கனவில், திருவாரூர்த் தியாகேசர் தோன்றிக் கட்டளையிட்ட பிரகாரம் அவர், திருவையாற்றுக்குக் குடிபெயர்ந்தார். அவர் 1787-ஆம் ஆண்டில் காலமானார். திருவையாறு, அரசர் ஸம்ஸ்கிருதக் கல்லூரியில் பயின்றுவந்த, தியாகராஜருக்கு எட்டாவது வயதில் உபநயனம் நடைபெற்றது; பதினெட்டாவது பருவத்தில், அவர் பார்வதி எனும் நங்கையை மணந்தார். இவ்வம்மையார், தியாகராஜரின் இருபத்தி மூன்றும் வயதில் காலமாகிவிட்டதால், அவருடைய தங்கையான கமலாம்பாளின் கரம்பற்றினார், தியாகராஜர்.

இந்தச் செய்தியை ஆதாரமாகக் கொண்டு, ராமப்பிரம்மம், திருவையாற்றுக்கு, 1774 ஆம் ஆண்டில் குடியேறியதாகப், பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி எழுதியுள்ளார்.

அநேகமாகத், தினந்தோறும் ராமாயணப் பிரவசனத்தை, அரண்மனையில் நிகழ்த்தி வந்த ராமப்பிரம்மம் திருவாரூரில் வசித்தாரென்று கூறுவது பொருத்தமுடையதாக இல்லை. சிலகாலம் அவர் திருவாரூரில்தான் இருந்தாரென்று நாம் கொண்டாலும், தன்மூத்த அல்லது அடுத்த மகனுக்குத் திருவாரூர்க் கடவுளின் பெயரை வைக்காமல், மூன்றாவது குமாரருக்குத் தியாகராஜன் எனப் பெயரிட்டதன் காரணம் யாதாயிருக்கும்?

மாருகத், தன் முதற் பிள்ளைக்கே, பஞ்சாபகேசன் (ஐப்யேசன்) என்று பெயரிட்டுள்ளாரே!

காசியாத்திரையை முடித்து விட்டுத் திரும்பிய மன்னர், ராமப்பிரம்மத்துக்குத் திருவையாற்றில் பதினைந்து வீடுகளைத் தானமளிக்க ஏற்பாடு செய்தபோது, அன்போடு மன்னரால் முன்பே அளிக்கப்பட்ட வீடு தனக்கிருப்பதால், வேறு அந்தணர்களுக்கு இந்தப் பதினைந்து வீடுகளையும் கொடுத்து விடுமாறு அவர் கேட்டுக்கொண்டாராம்.

தியாகராஜரின் தந்தையும், பாட்டனாரும் தஞ்சை அரண்மனையின் தொடர்பு மிகுந்தவர்களாதலால், அவர்கள், தஞ்சையிலோ அல்லது அருகாமையிலுள்ள கிராமத்திலோதான் வாழ்ந்திருக்கமுடியும். ஸ்வாமிகளின் ஜனனம், தந்தையின் ஊராகிய திருவையாற்றிலோ, தாயின் ஊராகிய மஹிமாலையிலோதான் நடைபெற்றிருக்கும். 'தலைச்சன்' என்றால், தாய்வீட்டில் பிரஸவமென்று கூறலாம். இவரோ, மூன்றாவது பிள்ளை, எனவே, பெரும்பாலும் திருவையாற்றில்தான் பிறந்திருக்கக்கூடும். ஆனால், சம்பந்தமேயில்லாத திருவாரூருடன், அவரது பிறப்பு இணைக்கப் படுவது ஏனென்பது விடைகாண முடியாத புதிர். திருவாரூரில் பிறந்த காரணத்தால்தான் தியாகராஜன் எனும் பெயர் சூட்டப்பட்டார் என்று எவரும் கூறமுடியாது. வெங்கடேசன் என்ற பெயரைக் கொண்டவர் திருப்பதியில் பிறந்தவரென்றோ, கைலாசம் என்ற பெயருடையவர் கயிலாயத்தில் பிறந்தாரென்று யாரும் கூறுவார்களா?

தியாகராஜரின் ஜனனஸ்தலமபற்றி நமக்குத் தெளிவுறுத்தும் சில ஸ்தோத்திரங்களையும், கீர்த்தனைகளையும் பார்ப்போம்.

தனது 'ப்ரஹலாத பக்தி விஜயம்'என்கிற இசைநாடகத்தில், ஒரு கந்தபத்யம் வாயிலாகத் தியாகராஜர் கூறுகிறார்:

"...ஸ்ரீமத் பஞ்சநதம்பனு பூமினி விலஸில்லுனட்டி புரவரமுன
ஸ்ரீ ராமஸ்வரூபுடனதகு ராமப்ரஹ்மார்ய ஸுதுட..."
[திருவையாற்றில்,ஸ்ரீராமனின் ஸ்வரூபமே எனத்தக்கவரான
ஸ்ரீராமப்பிரம்மத்தின் குமாரன்...]

வாலாஜாப்பேட்டை வெங்கடரமண பாகவதர் இயற்றிய "குருஸ்தோத்ர பஞ்சரத்ன''த்தில்,

''...ஸ்ரீமத் பஞ்சநத பட்டண நிவாஸின்...''(திருவையாற்றில் வசிப்பவர்) என்றும், அதே வெங்கடரமண பாகவதரின், ''ஸ்ரீகுரு மங்களாஷ்டக''த்தில்,

''...காவேரி தீரவாஸாய காருண்யாம்ருதவர்ஷிணே...''
[காவிரிக்கரையில் வாழும் கருணை மழை பொழிபவர்]

என்றும் கூறியுள்ளார். தற்காலம் வழக்கிலுள்ள "அஷ்டோத்தர சத நாமாவளி''யை இயற்றியவர், வித்யாஸுந்தரி,

பெங்களூர் நாகரத்தினம்மா. தியாகராஜ ஆராதனை உத்ஸவம் தொடங்கப்பட்ட காலத்தில், தக்ஷிணாமூர்த்தி அஷ்டோத்தரம் உபயோகப்படுத்தப்பெற்றுப், பின்னர், யாரோ ஒருவரால் தியாகராஜ அஷ்டோத்தர நாமாவளி இயற்றப்பட்டது. இந்த நாமாவளியின் மூலப்பிரதி, ஹரிகதை வல்லுநர், தஞ்சை நாகராஜ பாகவதரின் பாதுகாப்பில் இருந்தது. அதிலே, 'ஓம் பஞ்சநத க்ஷேத்ர நிகேதனாய நம:', என்ற அர்ச்சனை வரியும் இடம்பெற்றுள்ளது. இவற்றிலெல்லாம், திருவாரூரைப் பற்றிய ஒரு செய்தியும் கிடையாதென்பது, வியப்புக்குரியதல்ல.

தியாகராஜரே, மணிரங்கு ராகத்திலமைந்த, தன் கிருதியொன்றில், "...பஞ்சநத புரமுன ஜனிஞ்சின நா பா பமுல தீர்ச்சின பரணதார்த்திஹர..." [திருவையாற்றில் ஜனித்த என் பாவங்களைப் போக்கிய பிரணதார்த்திஹரன்]

என்று கூறியிருக்கிறார். இக்கிருதி, சமீப காலத்து வெளியீடொன்றில் இடம் பெற்றுள்ளமையால், இது தியாகராஜர் இயற்றியதல்ல என்று அறிஞர்கள் கருதுகின்றனர் எனினும், திருவையாறு தியாகப்பிரம்ம மஹோத்ஸவ சபையினரே இந்நூலை வெளியிட்டுள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது. வேங்கடரமண பாகவதரின் 'குரு சரணம பஜரே' என்ற கிருதியிலுள்ள வரிகள் பின்வருமாறு:

"...ராஜராஜ பரிபூஜித சரணம் ராஜித பஞ்சநத புரா பரணம்..."

அவருடைய மற்றொரு கிருதியும், இதே கருத்தைத் தருகின்றது.

"...திருவையாறு புரமுன வெலஸின ஹரிபக்தாக்ரேஸருலகு த்யாகராஜ..."

இவற்றில் எல்லாம், தியாகராஜர், திருவையாற்றில் வாழ்ந்தவரென்பதாகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதெனச் சிலர் கருதக்கூடும். அதே சமயம், ஓரிடத்தில் கூடத் திருவாரூரைப் பற்றி எவரும் 'மூச்சுக்கூட விடவில்லை' என்பதை நினைவிற்கொள்ள வேண்டும்.

தியாகராஜரின் அத்தை குமாரரும், முதற் சீடருமான மானம்புச்சாவடி வேங்கடசுப்பய்யர், தன் குருவைத் துதிப்பதாக அமைந்த கிருதியொன்றில், தியாகராஜர் பிறந்த ஊரைத் தெளிவாகத் தெரிவிக்கிறார்:

"...வினுதய்ய ஜனுலார திருவையாரு க்ராமமுன ஜனனயந்தி கவிஜனுலகே கான ப்ரயோஜனமுல தெலியினலேரன ஜன்முனி அனுதினமு நுதிந்து ஸத்குரு த்யாகராஜ..."

இது ஒருபுறமிருக்கத், தியாகராஜரைப் பற்றிய தன் நூலில், அவருடைய பல சீடர்களின் பெயர்களைப் பட்டியல் போட்ட பேராசிரியர் பி ஸாம்பமூர்த்தி, எவ்வாறு, ஏன் வேங்கடசுப்பய்யாவின் பெயரை அதிலே சேர்க்காமல் விட்டாரோ!

ராமநாதபுரம் (பூச்சி) ஸ்ரீநிவாஸ அய்யங்காரின், ரீதிகௌள ராகக் கீர்த்தனையான, "ஸத்குருஸ்வாமிகி," தெரிவிப்பது

யாதெனில்:

> ''...வஸுதலோ மெரய பஞ்சநதமுன ஸுவர நாரதாம்சுலே அவதரிஞ்சி...'' [தியாகராஜர், நாரத முனிவரின் அவதாரமாகத் திருவையாற்றில் பிறந்து...]

''த்யாகராஜ ஸத்குரு'' என்ற ஹரிகேசநல்லூர் டாக்டர் எல். முத்தய்யா பாகவதரின் ஹிந்தோள ராகக் கீர்த்தனே,

> ''காவேரீ தீரமுன ஸ்ரீகர பஞ்சநத புரமுன பூவர ஸ்ரீ ராமப்ரஹ்ம புத்ருடுகானவதரிஞ்சி...'' [காவேரிக் கரையிலுள்ள திருவையாற்றில் ஸ்ரீ ராமப் பிரம்மமெனும் அந்தணரின் குமாரராகப் பிறந்து...'']

மீசு கிருஷ்ணய்யர் என்பவர், ஸத்குருவைப் போற்றுவதான 'த்யாகராஜ ஸத்குரு' [ராகம்: மோனம்] என்ற கீர்த்தனே யொன்றை இயற்றியுள்ளார் அதிலே,

> ''பஞ்சநத க்ஷேத்ரம்புன பக்த ராமப்ரஹ்ம ஸீதுடஞ்சி ஜனிஞ்சின நாரத நாடின ஸங்கீத மெருகி...'' [பக்தராகிய ராமப்பிரம்மத்துக்கும், ஸீதம்மாவுக்கும் புத்திரனுகத் திருவையாற்றில், நாரதரால் அளிக்கப்பட்ட ஸங்கீதத்தைப் பெற்று...'']

என்று வருகிறது.

மேலே கொடுத்துள்ள கிருதிகளிற் சில, 'அவதரிஞ்சி' என்ற வார்த்தையைத் தாங்கி நிற்கின்றன வடமொழிச் சொல்லான, 'அவதார' என்பது பிறப்பு என்று மட்டுமில்லாது, 'வேற்றிடத்துக்குச் செல்வது,' 'சென்றடைவது' என்று கூடப் பொருளேத் தருவதாகும். இதை ஆதாரங்காட்டித், தியாகராஜர் திருவையாற்றைச் சென்றடைந்தார் என்று மட்டுமே இக்கிருதிகள் கூறுகின்றன என்ருெரு வாதத்தை, ஸ்வாமிகள் திருவாரூரில் பிறந்தாரென்று கருதி வலியுறுத்துவோர், முன்வைக்க வரக்கூடும். வேற்றிடமாகத் திருவையாற்றைக் கொண்டு அங்கே சென்றடைந்தவர், தியாகராஜர் இல்லையென்பதை நாம் நினைவிற்கொள்ளுதல் அவசியம் ஒருக்கால், இச்சொல், ராமப்பிரம் மத்துக்கு வேண்டுமானுல் பொருந்தலாமே தவிர, தியாகராஜருக்குூ அன்று. மேலும், ஒரு மஹனீயர் அல்லது பெரும் நிலைக்கு உயர்ந்த ஒருவரின் வாழ்க்கைச் சரிதம் பற்றிக் கூறுகையில், அவர் பிறந்த மற்றும் மரித்த இடங்களைத்தான் குறிப்பிடுவது மரபு அதை விடுத்து, அவர் எங்கெல்லாம் குடி மாறினுர் என்று மட்டும் கூறும் வழக்கமில்லை; அதிலும், அவர் பிறந்த ஊர் எதுவென்று நிச்சயமாகத் தெரிந்திருக்குமானுல் அதைக் குறிப்பிடாமலிருப்பதில்லை. மேலே கண்ட கிருதிகளில், அதை இயற்றிய ஒருவர்கூடத் திருவாரூரைப்பற்றிய பேச்சேயில்லாமல், திருவையாற்றை மட்டும் கூறக் காரணந்தான் என்ன? ஸ்வாமிகளின் சொந்த அத்தை குமாரரே, 'ஜனிஞ்சின' என்ற சொல்லாட்சியின் மூலம் 'பிறந்த' என்ற பொருளை உறுதிப்படுத்தி

யிருக்கிறார் அல்லவா? ஆகவே, ஸ்வாமிகளின் விஷயத்தைப் பொறுத்தவரை, 'அவதரிஞ்சி' யெனுஞ்சொல், 'பிறந்து' என்ற பொருளை மட்டுமே கொண்டதாகும். கோவூர், சீர்காழி, திருவொற்றியூர், லால்குடி, சோளிங்கபுரம் போன்ற பல்வேறு ஊர்களில் உறையும் கடவுளரின் மீதாகவும் கீர்த்தனைகளைப் படைத்த தியாகராஜர், திருவாரூர்க் கடவுளைப் பற்றிப் பாடியதாக ஒன்று கூட நமக்குக் கிடைக்கவில்லையே, அதன் காரணமென்ன?

ஸத்குரு தியாகராஜர் 1847-ஆம் ஆண்டில் சித்திபெற்று, அவருடைய ஆராதனை உத்ஸவம் முதன் முதலாக 1906-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. தில்லைத்தானம் ராமய்யங்காரின் சீடர்களான தில்லைத்தானம் நரஸிம்மபாகவதர், பஞ்சு பாகவதரென்ற சகோதரர்களே இதை நடத்தவாரம்பித்தனர். அதற்கு முன்பாக ஸ்வாமிகளின் சீடர்கள் - முக்கியமாகத் தில்லைத்தானம், உமையாள்புரத்தைச் சேர்ந்தவர்கள் - ஆண்டுதோறும் புஷ்ய பஹுள பஞ்சமி நாளில், தியாகராஜரின் ஸமாதிக்கு வந்து சேருவார்கள் அவரது சீடர்களான உமையாள்புரம் சுந்தர பாகவதர், கிருஷ்ண பாகவதர் என்ற சகோதரர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஸமாதி பிருந்தாவனத்துக்குப் பூஜை நடத்தி, சில கிருதிகளைப் பாடிவிட்டுத், தத்தம் ஊருக்குத் திரும்பி, வைதிக முறையிலான ஆராதனையும், பின்பு ஸமாராதனையும் நடத்தி வருவதே வழக்கம் இதை விமரிசையாகக் கொண்டாட வேண்டுமென்று எண்ணிய நரஸிம்ம பாகவதர் சகோதரர்கள், சென்னை திருவல்லிக்கேணியிலிருந்த ஸ்வாமிநாத சாஸ்திரிகள் உணவு விடுதியில் தங்கியிருந்த போது, பல இசைவாணர்களையும், கதாகாலக்ஷேபக் கலைஞர்களையும் சந்தித்துத் தமது கருத்தைப் பற்றிக் கலந்தாலோசித்து, முடிவெடுத்து, 1906 ஆம் ஆண்டு, உத்ஸவத்தைத் தொடங்கினார்கள் 1907 ஆம் ஆண்டில் நரஸிம்ம பாகவதர் காலமான பின்பும், பஞ்சு பாகவதர் 1909 ஆம் ஆண்டு வரை, தம் தமையனாரின் பெயரையும் பத்திரிகையில் சேர்த்தே வெளியிட்டு வந்தார். ஸத்குரு ஸ்வாமிகள் பிறந்த ஊரைப்பற்றி இந்தப் பத்திரிகைகள் தெரிவிப்பதை நாமும் அறிய வேண்டாமா?

ஓம்
ஸ்ரீ ராம ஜெயம்
ஸத்குரு த்யாகராஜ ஸ்வாமியவர்கள்
ஆராதன உத்ஸவப் பத்திரிகை

உலகு புகழ் சோழ நாட்டில் காவேரி நதியின் தென்பால் விளங்கும் திருவையாறு என்னும் க்ஷேத்திரத்தில் வால்மீக அம்சமாகிய ஸத்குரு த்யாகராஜஸ்வாமி அவதரித்து ஸங்கீத சாஸ்திர ஸாகரத்தைக் கடைந்து ஸுஸ்வர ஸாராமிர்தமெடுத்து ஸ்ரீராம நாம குணச்சர்க்கரை கலந்து கீர்த்தனங்களென்னும் திவ்ய ஔஷதம் செய்து நமது பவரோகம் தீர பரிந்தளித்திருப்பது

எல்லோருமறிந்த விஷயம். அந்த மகாத்மாவுக்கு ஸன்யாஸ விதிப்படி வருஷம் தோறும் நடந்துவரும் ஆராதன உத்ஸவத்தை ஷை ஸத்குருநாதனிடம் பக்தியுள்ள சங்கீத வித்வான்களும், பாகவதோத்தமர்களும் அபிமானித்து இவ்வருஷமுதல் வெகு சிறப்பாய் நடத்த நிச்சயித்திருப்பதால் அடியிற்கண்ட தினங்களில் நடக்கும் உத்ஸவம் ஸங்கீதக்கச்சேரி, பகவத்குண கதை, ஸமாதி பூஜை - பிராமண சந்தர்ப்பணம் - வீதி பிரதக்ஷிணம் முதலியவைகளுக்கு தங்கள் இஷ்டமித்ரர்களுடன் வந்திருந்து ஆனந்திப்பதுடன் தங்களால் இயன்ற மட்டில் பொருளுதவி செய்து ஸத்குரு கிருபை பெற பிரார்த்திக்கின்றனம்.

கீலக ஞு மார்கழி மீ 24உக்கு [1909 ஞு ஜனவரி 7உ] முதல் ஷை மார்கழி மீ 27உக்கு 1909 ஞு ஜனவரி மீ 10உ வரைக்கும் பிரதி தினமும் பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் ராத்திரி 8 மணி முதல் 12 மணி வரையிலும் தகுந்த ஸங்கீத வித்வான்களுடைய ஸங்கீத கச்சேரிகளும் பாகவத சிகாமணிகளுடைய கதாகாலக்ஷேபங்களும்

28உ–பகல் 7 மணி முதல் 9 மணி வரையில் ஸமாதி பூஜை
9 மணி முதல் 12 மணி வரையில் குரு ஆராதனம் வைதிகம்
12 மணி முதல் பிராமண சந்தர்ப்பணம்
5 மணி முதல் வீதி பிரதக்ஷிணம்
இரவு 8 மணி முதல் த்யாகராஜ ஸத்குருஸ்வாமி சரித்திர கதாகாலக்ஷேபம்.

இப்படிக்கு
ஷை குரு சிஷ்ய பரம்பரை
பிர்மஸ்ரீ நரஸிம்ஹ பாகவதர்,
ஷை யார் தம்பி பஞ்சுவய்யர்

THE COMMERCIAL PRESS, TRIPLICANE.

1911–ஆம் ஆண்டு உத்ஸவத்தின் போது தான், பஞ்சுபாகவதர் தன் பெயரை மட்டும் பத்திரிகையில் அச்சிட்டார். வார்த்தைகளும் சில மாற்றப்பட்டன. அந்தப் பத்திரிகையின் நகலையும் பார்ப்போம்:

உ
ஸ்ரீ ராம ஜெயம்
ஸத்குரு ஸ்ரீமத் தியாகராஜ ஸ்வாமிகளவர்களுடைய
64-வது ஸம்வத்ஸர ஆராதனேத்ஸவப்பத்திரிகை

உத்தமோத்தம சிவ க்ஷேத்திரமாகிய திருவையாறென்னுந் திருப்பதியின் கண்ணவதரித்து ஸ்ரீராம குணமாகிய செந்தேனை யமரர்களும் வியக்க பூவுலகிற் காளமேகம் போற் சங்கீதத்தாற் பொழிந்தருளிய ஷை ஸ்ரீ ஸ்வாமிகளவர்களை யுத்தேசித்து இந்தச் சாதாரண ஞு தை மீ 6உ வியாழக்கிழமை வழக்கம் போலப்

பஞ்சநதப் பதியிற் பூஜிக்க உத்தேசித்திருப்பதால் தாங்களவசியம் முன்னமே வந்து இயன்றவளவு பொருளுதவி புரிந்து அப்பெரியோரது பிரஸாதத்தையடைய பிரார்த்திக்கின்றவாம்

இங்ஙனம்,
ஷை ஸத்குரு சிஷிய பரம்பரையில் ஒருவராகிய
ஸ்ரீ இராமய்யங்காரவர்கள் சிக்ஷியர்
திருநெய்த்தானம் பஞ்சுவய்யர்.

ஸாதாரண ஞூ மார்கழி மீ (B.P.T.)

மேலே கொடுக்கப்பட்டுள்ள பத்திரிக்கைகளின் மூலம், தில்லைத்தானம் ராம அய்யங்காருக்கும், அவருடைய மாணுக்கர்களும், ஆராதனை விழாவை முதன்முதலாகத் தொடங்கியவர்களுமான தில்லைத்தானம் நரஸிம்ம பாகவதர் சகோதரர்களுக்கும், தியாகராஜர் திருவையாற்றில்தான் பிறந்தார் என்பது உறுதியாகத் தெரிந்திருக்கவேண்டும் என்பது நிச்சயமாகின்றது ஒரு சில வார்த்தை மாற்றங்களுடன் இதே செய்தியைத் தாங்குவதான உத்ஸவப் பத்திரிக்கைகளே, நாளது வரையிலும், ஆராதனை விழாவின் பொறுப்பை, 1945 ஆம் ஆண்டிலே ஏற்று நடத்தி வருகின்ற தியாகப்பிரம்ம மஹோத்ஸவ ஸபையினரால் வெளியிடப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த விழாவுக்கான பத்திரிகையிலிருந்து ஒருபகுதி:

> ''...சோழ நாட்டிற்கு ஒர் திலகம்போல் விளங்குவதும் காவிரியாற்றின் வடகரையில் உள்ளதுமான தக்ஷிண கைலாயமெனும் திருவையாறு என்கிற பஞ்சநத க்ஷேத்ரத்தில் ஸ்ரீ வால்மீகி முனிவரே வந்து அவதரித்து ஸ்ரீ ராமசந்த்ர மூர்த்தியின் குணுனுபவத்தை ஸங்கீத ஸாராம்ருதமான கீர்த்தனங்களாக உலகிற்கு அனுக்ரஹித்து துரீயாச்ரமத்தை வகித்து சித்தியடைந்த ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகள்...''

இந்தப் பத்திரிகையும், திருவையாற்றில் தியாகராஜர் பிறந்தாரென்பதையே அறிவிக்கின்றது. இதை இதுகாறும் எவரும் மறுக்கவோ மாற்றம் செய்யவோ இல்லை.

மேலே கொடுக்கப்பட்ட அனைத்துச் செய்திகளையும் ஆய்ந்து காணும்போது, ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகள் பிறந்தது திருவையாற்றில்தான் என்பது சந்தேகத்துக்கிடமின்றி உறுதிப்படுகின்றது.

மேலும் ஒன்றையும், • இங்கு குறிப்பிட்டாக வேண்டியிருக்கிறது.

தியாகராஜரின் ஒரே மகளான ஸீதாலக்ஷ்மியைத், திருவையாற்றுக்குச் சுமார் அரை மைல் தொலைவிலுள்ள அம்மாள் அக்ரஹாரத்தைச் சேர்ந்த குப்புஸ்வாமி என்பவருக்கு மணம்

முடித்தனர் இவரை 'அகிலாண்டபுரம் குப்புஸ்வாமய்யா' என்றும் அழைப்பதுண்டு.

பேராசிரியர் பி. ஸாம்பமூர்த்தி இவருடைய பெயரைப் 'பஞ்சாபகேசய்யா' என்றும், வாலாஜாப்பேட்டை கிருஷ்ணஸ்வாமி பாகவதர், 'சுப்பராமய்யா' என்றும் எழுதியிருக்கிறார்கள்!

குப்புஸ்வாமி – ஸீதாலக்ஷ்மி தம்பதியர் பெற்ற ஒரே மகனுக்குப், பாட்டனின் பெயராகத் 'தியாகராஜன்' என்பது இடப்பெற்றது. இவரது மனைவி குருவம்மா என்பவர். கணவர் காலமானதும், சந்ததியற்ற குருவம்மா ஸ்வாமிகள் பூஜித்த ஸ்ரீராம பஞ்சாயதன விக்கிரஹம் மற்றும் எஞ்சியிருந்த சாமான்களோடு, தன் மாமன் 'சிவப்பு' சுப்பிரமணிய அய்யர் வீட்டுக்கே வந்துவிட்டார். தஞ்சை தெற்குராஜ வீதி, வராஹப்பய்யா சந்திலுள்ள இவ்வீட்டில்தான், அந்த விக்கிரஹம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது ஒருசமயம் நானும் ஹரிகதை விற்பன்னர், தஞ்சாவூர் என். எஸ். கிருஷ்ண பாகவதரும், குருவம்மாவிடம் உரையாடிக்கொண்டிருந்தபோது, இடையே குருவம்மா, ''என்ன பாகவதரே! எல்லோரையும் போல நீரும் உளர ஆரம்பித்து விட்டீரா?...நான் உமக்கு எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்? ஸ்வாமிகள் பிறந்தது, வளர்ந்து வாழ்ந்தது, சித்தியடைந்தது எல்லாமே பஞ்சநதத்தில் தான் என்று. எவ்வித அறியாமையினாலோ, திருவாரூர், திருவாரூர் என்று திரும்பத் திரும்பச் சொல்லுகிறார்களே,'' என்று சற்று கோபந்தொனிக்கக் கூறினர். இதை விடவும் ஆதாரம் தேவையா?

இந்தக் கட்டுரையில் தொடகக முதல் கொடுக்கப்பட்ட அத்தனை ஆதாரங்களையும், உண்மைச் செய்திகளையும், மிகவும் கவனமாக ஆய்வு செய்த பின்னரும், ஸ்ரீ தியாகராஜர், திருவாரூரில் தான் பிறந்தாரென்ற தவறைச் சரியென்று வாதிப்பதிலும், வளர்ப்பதிலும் நாம் அத்தனை அறியாமையுடனே அல்லது பிடிவாதத்துடனே இருப்பது நியாயமாகுமா?

–குருக்ருபா

நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

KTS சீலுடன் 22 Ct, பவுன் நகைகள் வெள்ளி கொலுசு
வகைகள், கவரிங் நகைகள், புல்லட் பாப்புலர்
பிரஷர் குக்கர், மீனு மிக்ஸ் கிடைக்குமிடம்.

ஆண்டவர் ஜுவல்லரி

245, மாதா கோவில் வீதி,
காரைக்கால்-609602. ஹலோ: 2382

ஆண்டவர் பவுன் ஆபரண தொழிலகம்

42, மஸ்தான் பள்ளி வீதி,
காரைக்கால்-609602. ஹலோ, 2532

உரிமை: தெண்டாயுதபாணி பத்தர்
& சன்ஸ்

வாழ்த்துக்கள்!



சுப. சீனிவாசன்,

தலைவர்,
புதுவை மாநில ஆசிரியர்
கூட்டமைப்புகளின் பேரவை

காரைக்கால் "ஸப்தஸ்வரம் இசைப்பேரவை" காரையில் சிறப்பான இசைப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது. அதன் சிகரமாக "ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர் எங்கு பிறந்தார்?" எனும் நூலையும் வெளியிட்டு உயர்வான சேவை புரிந்துள்ளது. இது போன்ற சிறப்பான சேவைகளில் மேலும் மேலும் தொடர்ந்து வெற்றிகளைக் குவிக்க மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறேன்.

சுப. சீனிவாசன்.

With Best Compliments from

BPL TV
BPL VCR
BPL AUDIO

Authorised Sales & Service Dealer

BARANI & CO.,

Market Street - Karaikal-609602.

Phone: 2643, 2364

Phone: 2580

With Best Compliments from

VETTRIVEL ELECTRICALS

Dealers:- All Winding Wires and Insulating Materials: NBC and Tata Ball Bearings Mysore Lamps.

304, Church Street,

KARAIKAL — 609 602.

உ

ஸ்ரீ ராஜ கணபதி துணை

Grams "RABBIT"

தொடர்ந்து சிறந்த இசைப்பணி ஆற்றுவதுடன்
ஸத்குரு ஸ்ரீ தியாகராஜர்
எங்கு பிறந்தார்?
எனும் இந்நூலை வெளியிடும்
ஸப்தஸ்வரம் இசைப் பேரவைக்கு

எமது நல்வாழ்த்துக்கள்!

முயல்மார்க் ஜுவல்லரி ஹவுஸ்
முயல்மார்க் ஃபைனான்சியர்ஸ்
முயல்மார்க் ரைஸ்மில்
முயல்மார்க் எண்டர்பிரைசஸ்

காரைக்கால் - 609 602.

போன்: கடை : 2305
வீடு : 2003

போன்: மில் : 2325
வீடு : 2098

எமது நல்வாழ்த்துக்கள்!

முருகன் சாமில் & டிம்பர் டிப்போ

கிளை: 16, பிரமசாமி பிள்ளை தெரு,
காரைக்கால்-609602.

மரவாடி: 2226
போன்: கிளை : 2365
வீடு : 2031

கட்டிடங்களுக்கு வேண்டிய மரம் வகைகள் "EVEREST" ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் சீட்கள், தீ பிடிக்காத கூறை சாதனங்கள், LIGHT ROOFINGS சலவை கற்கள், NEYCER சானிட்டரி சாமான்கள் தளக்கற்கள், "DALMIA" சிமிண்ட் "SPARTEK" கற்கள் குறைந்த விலையிலும், தரமாகவும் நாங்கள் வழங்குகின்றோம்.

"ஒரே விலைக்கடை"

மகளிர் கூட்டுறவு அச்சக சங்கம், காரைக்கால். போன்: 2513